

"பன்றி பல குட்டி, சிங்கம் ஒரு குட்டி"

—இப்படி ஒரு பழமொழியை நீங்கள் அடிக்கடி கூறிவருகிறீர்கள். உங்களில் யாரோ ஒருவர் எப்போதோ இதைச் சொல்லிவைத்திருக்கிறார். அதையே நீங்களும் திரும்பத் திரும்பக் கூறிவரு கிறீர்களே !

'பன்றி பல குட்டி' என்பது சரிதான். ஆனால், 'சிங்கம் ஒரு குட்டி' என்பதுதான் தவறு. ஒரே பிரசவத்தில், மூன்று, நான்கு குட்டிகள்கூட எங்கள் இனத்தில் பிறக்கும்.

என்னையே எடுத்துக்கொள்ளுங்களேன். என் அம்மா என்னையும் என் தங்கையையும் ஒரே தடவையில்தான் பெற்றாள். முதலில் நான் பிறந்

பிடரி மயிர் வளரவில்லை. எங்களில் ஆணுக்குத்தான் பிடரி மயிர் உண்டு. பெண்ணுக்குப் பிடரி மயிர் கிடையாது என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே!

இப்போது எனக்கு வயது பன்னிரண்டு. நானும் என் அம்மா அப்பாவைப் போல், நன்றாக வளர்ந்து விட்டேன்; தைரியமாக வேட்டை ஆடுவேன். சூரியன் மறையும் சமயம் நான் ஒரு சத்தம் போடுவேன். என்னுடைய அந்தக் கர்ஜனையைக் கேட்டுக் காடு முழுவதும் கிடுகிடுக்கும். சிறிய மிருகங்களெல்லாம் நடுநடுங்கி நாலா பக்கமும் நாலுகால் பாய்ச்சலில் ஓடும். நான் தரையை நோக்கி எவ்வளவுக்கு எவ்வளவு குனிந்து கர்ஜிக்கிறேனோ, அவ்வளவுக்கு அவ்வளவு சத்தம் வெகு தூரம் கேட்கும்.

பயங்கரமான கர்ஜனை, கம்பீரமான தோற்றம் இவைகளுடன், ஓர் உயர்ந்த குணமும் எங்களிடம் உண்டு. நான் பசித்தால்தான் மற்ற மிருகங்களை வேட்டையாடுவேன். தேவையில்லாத போது, எந்த மிருகத்திற்கும் தொந்தரவு கொடுக்க மாட்டேன். ஆனால், எனக்கு யாரும் தொந்தரவு கொடுத்தால், சும்மா விடமாட்டேன். மணிக்கு ஐம்பது மைல் வேகத்தில் ஓடிப் பிடித்து விடுவேன்! இந்தக் குணங்களெல்லாம் எங்களிடம் இருப்பதால்தானே 'மிருக ராஜன்' என்று நீங்கள் அழைக்கிறீர்கள்? இல்லாதபோனால், புலி அல்லது யானைக்கு அந்தப் பெயரைக் கொடுத்திருக்க மாட்டீர்களா?

காற்று பலமாக அடிக்கும் சமயம், நான் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பேன். நல்ல

மிகவும் அழகான, அடர்த்தியான பிடரி மயிர் ஆப்பிரிக்கச் சிங்கத்திற்கு உண்டு.

இந்தியாவில் முன்பு நூற்றுக் கணக்கான ராஜாக்கள் இருந்தார்களாம். ஆனால், இப்போது ராஜா என்று யாருமே இல்லையாம். மிருக ராஜாக்களாகிய எங்களுக்கும் அந்தக் கதி வந்துவிடக் கூடாதே என்பதுதான் என் கவலை!



அப்போதெல்லாம் இந்தப் பிள்ளைக்குப் பாலை உறிஞ்சிக் குடிக்கத் தெரியாது. என் மடியி லிருந்து இதன் வாய்க்குள்ளே பாலைப் பீச்சிவிடு வேன். பாலைக் குடித்துவிட்டுப் பைக்குள்ளே நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கும். நாள் ஆக ஆக, இது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வந்தது.

இப்பொழுதெல்லாம், இது அடிக்கடி பையை விட்டு வெளியே வரும். பக்கத்திலே உள்ள புல்லை ஆசை ஆசையாகக் கடித்துத் தின்னும். நன்றாகக் குதித்துக் குதித்து விளையாடும். அப்போது, ஏதாவது சத்தம் கேட்டால் போதும்; உடனே நான் 'லபக்'கென்று இதைப் பிடித்துப் பைக்குள்ளே போட்டுக் கொள்வேன். கண் மூடிக் கண் திறப்பதற்குள் அந்த இடத்தைவிட்டு மறைந்து விடுவேன்.

இந்தக் குழந்தை இன்னும் மூன்று மாதம் வரைதான் என் பைக்குள்ளே வசிக்கும். அதற் குள்ளே, அதாவது எட்டாவது மாதத்திற்குள்ளே, இதற்குத் தானாகவே இரை தேடத் தெரிந்துவிடும். அப்புறம் என் உதவி எதற்கு? "இன்னமும் நீ என்ன, சின்னப் பிள்ளையா? நீதான் நன்றாக வளர்ந்து விட்டாயே! இனியும் நீ பைக்குள்ளே இருந்தால், மற்றப் பிள்ளைகள் உன்னைப் பார்த் துச் சிரிக்கமாட்டார்களா?" என்று கூறிப் பையி லிருந்து இதை வெளியில் இறக்கிவிடுவேன். அப் புறம் இது திரும்பி என் பைக்கு வராது. அப் படி வந்தாலும் நான் இடம் கொடுக்கமாட்டேன்.

எங்களைப் போலவே ஆஸ்திரேலியாவில் சில மிருகங்கள் இருக்கின்றன. எங்களைச் 'சிவப்புக்

நான் அஸ்ஸாம் காட்டைச் சேர்ந்தவன். எனக்கும் சரி, இந்தியாவில் உள்ள என் இனத்தாருக்கும் சரி, ஒரு கொம்புதான் இருக்கும். ஆனால், ஆப்பிரிக்கக் காண்டா மிருகத்துக்கு இரண்டு கொம்புகள் இருக்கும். இரண்டும் ஒரே நீளம் இருக்காது; ஒன்று குட்டையாயிருக்கும்; மற்றொன்று நீளமாயிருக்கும். ஒரு கொம்பு 20 அங்குல நீளம் இருந்தால், இன்னொன்று 30 அங்குல நீளம் இருக்கும். 44 அங்குல நீளமுள்ள கொம்புகூட இருக்கிறது!

இந்தக் கொம்புக்காகவே ஆப்பிரிக்காவிலுள்ள சில சாதியார் என் இனத்தவரை வேட்டையாடுகிறார்கள். சாதாரண அம்பினால், அவர்கள் வேட்டையாட மாட்டார்கள். அவர்கள் உபயோகப்படுத்தும் அம்பின் நுனியில் நஞ்சைத் தடவி வைத்திருப்பார்கள். அந்த நஞ்சு உடம்புக்குள் போனால், எந்த மிருகமும் சுருண்டு விழ வேண்டியதுதான்!

இந்தக் கொம்பினால் மனிதர்களுக்கு என்ன பயன்? இதை ஒரு வீட்டில் வைத்திருந்தால், அந்த வீட்டுக்காரரைப் பெரிய சூராதி சூரர் என்று நினைக்கிறார்கள். வெற்றிச் சின்னமாக இது விளங்குகிறது. அது மட்டுமா? சில நோய்களைப் போக்கவும் எங்களுடைய கொம்பு மருந்தாக உதவுகிறது. இப்படி எங்களுடைய கொம்பை மட்டும்தானா மருந்தாக உபயோகிக்கிறார்கள்? இல்லை; எங்களுடைய எலும்பு, இரத்தம், மூத்திரம் எல்லாவற்றையுமே மருந்தாக உபயோகிக்கிறார்கள்!

என் உருவத்தைப் பார்த்தவுடனே, "இவ்வளவு பெரிய மிருகமாக இது இருக்கிறதே, ஒரு